**செய்தி வெளியீடு எண் : 1099** **நாள் : 04.06.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். எஸ். சிவசங்கர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் அடங்கிய தமிழ்நாட்டு குழுவினர், இரயில் விபத்து ஏற்பட்ட ஒடிசாவில் இரண்டாவது நாளாக இன்று (04.06.2023) மீட்புப் பணி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.**

புவனேஸ்வர் ராஜீவ் பவனில் உள்ள சிறப்பு மீட்பு ஆணையர் அலுவலகத்தில் ஒடிசா மாநில தலைமைச் செயலாளர் திரு.பிரதீப் குமார் ஜெனா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அலுவலர்களுடன் நடைபெற்ற உயர் நிலை ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீட்புப் பணிகள், மருத்துவ வசதிகள், சிகிச்சையில் உள்ளோர், சிகிச்சையிலிருந்து வீடு திரும்பியோர் உள்ளிட்ட விவரங்களை கேட்டறிந்தார்கள்.

மேலும், புவனேஸ்வர் மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு சென்ற மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். எஸ். சிவசங்கர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் அடங்கிய தமிழ்நாட்டு குழுவினரிடம், இரயில் விபத்து கட்டுப்பாட்டு அறைக்கு வரும் அழைப்புகள் மற்றும் விவரங்கள் குறித்து அலுவலர்கள் எடுத்துரைத்தனர். போர்க்கால அடிப்படையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in